www.Padasalai.Net www.TrbTnpsc.com

HSL

8 - ஆம் வகுப்பு

# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2023

## தமிழ்

காலம் : 2.30 மணி மதிப்பெண்கள் : 100

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 10 X 1 = 10

1. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ........... . அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு
2. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ......... .
   அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்
3. பள்ளிக்குச் என்று கல்வி ............ சிறப்பு. அ) பயிலுதல் ஆ) பார்த்தல் இ) கேட்டல் ஈ) பாடுதல்
4. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ............. நீட்சியாகவே உள்ளது.
   அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின் இ) உணவின் ஈ) வாழ்வின்
5. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ....... .
   அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள் இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்
6. 'செம்மரம்' என்னும் சொல் ......... த் தொகை அ) வினை ஆ) பண்பு இ) அன்மொழி ஈ) உம்மை
7. அரசரை அவரது ........... காப்பாற்றும்.
   அ) செங்கோல் ஆ) வெண்கொற்றக்குடை இ) குற்றமற்ற ஆட்சி ஈ) படைவலிமை
8. பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது .......... ஆகும்.
   அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) பயனிலை ஈ) வேற்றுமை
9. 'நலமெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........... .
   அ) நலம் + எல்லாம் ஆ) நலன் + எல்லாம் இ) நலன் + எலாம் ஈ) நலம் + எலாம்
10. முறை + எனப்படுவது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ........... ..
    அ) முறையப்படுவது ஆ) முறையெனப்படுவது இ) முறை எனப்டுவது ஈ) முறைப்படுவது

**II கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 x 1 = 5

11. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ........ என அழைக்கப்பட்டன.
12. புற உலக ஆராய்ச்சிக்கு ......... கொழு கொம்பு போன்றது.
13. பின்னலாடை நகரமாக ............ விளங்குகிறது.
14. சேரர்களின் நாடு .......... எனப்பட்டது.
15. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் .............. .

**III பொருத்துக.** 4 x 1 = 4

| | | |
|---|---|---|
| 16. இயற்கை அன்பு | - | புலவரே வருக |
| 17. மணிமுடி | - | தோன்றல் விகாரம் |
| 18. விளித்தொடர் | - | இயல்புப் புணர்ச்சி |
| 19. கடைத்தெரு | - | பெரியபுராணம் |

**IV அடி மாறாமல் எழுதுக.** 3 + 2 = 5

20. கற்றோர்க்குக் ................ எனத் தொடங்கும் கல்வி அழகே அழகு பாடல். *(அல்லது)*
    வாழ்க நிரந்தரம் ............. என தொடங்கும் தமிழ் மொழி வாழ்த்து.
21. சொல்லுக .......... எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**V எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 5 x 2 = 10

22. செய்யுளின் மரபுகளை ஏன் மாற்றக் கூடாது?
23. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
24. சோழவீரர்களைக் கண்டு கலிங்கர் எவ்வாறு நடுங்கினர்?
25. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
26. சான்றோர்க்கு அழகாவது எது?
27. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
28. நோயின் மூன்று வகைகள் யாவை?
29. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?

**VI எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி.** 4 x 2 = 8

30. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
31. வினைமுற்று என்றால் என்ன?
32. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?



Scanned with CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

33. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அ) பால் .......... . *(குடி / பருகு)* ஆ) பூ ......... *(கொய் / பறி)*

34. தமிழ் எண்களை எழுது.
அ) உலக இயற்கை நாள் அக்டோபர் 3 ........... . ஆ) உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16 ............... .

35. பின்வரும் மரபுத் தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
அ) கொடி கட்டிப் பறத்தல். ஆ) வாழையடி வாழையாக.

TS1002 110
8 தமிழ்

9

**VII எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

36. நீதிநெறி விளக்கப் பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
37. ஏவல் வினைமுற்றும், வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்
38. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?
39. இந்தியத் தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?
40. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
41. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களின் பெயர்களை எழுதுக.

**VIII விடையளி.** 5 x 5 = 25


42. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை? *(அல்லது)*
இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றை கருதுகிறீர்கள்?

43. 'இருப்பிடச் சான்று வேண்டி' வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக. *(அல்லது)*
விளையாட்டு. போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்கு பாராட்டுக் கடிதம் எழுதுக.

44. **சரியான இணைச் சொற்களை இட்டு நிரப்புக.**
***(மேடு பள்ளம், ஈடுஇணை, கல்வி கேள்வி, போற்றிப் புகழப்பட வாழ்வு தாழ்வு, ஆடி அசைந்து)***
அ) சான்றோர் எனப்படுபவர் ............... களில் சிறந்தவர் ஆவர்.
ஆ) ஆற்று வெள்ளம் ........... பாராமல் ஓடியது. இ) இசைக் கலைஞர்கள் ................. வேண்டியவர்கள்.
ஈ) தமிழ் இலக்கியங்களின் பெருமைக்கு ......... இல்லை . உ) திருவிழாவில் யானை ............... வந்தது.

45. **சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.**
அ) வட்டெழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்து அமைத்து எழுதுக.
ஆ) உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்.
இ) வென்றதைப் பரணி பகைவரை ஆகும் பாடும் இலக்கியம்.
ஈ) கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்.
உ) ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது.

46. **கீழ்க்காணும் படம் சார்ந்த சொற்களை எழுதுக.**
..................................................
..................................................
..................................................
..................................................
..................................................
..................................................



**IX விடையளி. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 3 x 8 = 24

47. அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக. **(அல்லது)**
ஆ) கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.

48. அ) காலம் உடன் வரும் - கதையைச் சுருக்கி எழுதுக. ***(அல்லது***
ஆ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக.

49. அ) "நான் விரும்பும் கவிஞர்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக. *(அல்லது)*

**ஆ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**
***நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.***
முன்னுரை - நோய்வரக்காரணங்கள் - நோய்தீர்க்கும் வழிமுறைகள் - வருமுன் காத்தல் - உணவே மருந்தும் - உடற்பயிற்சியின் தேவை - முடிவுரை.

Scanned with CamScanner



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

அரையாண்டுத் தேர்வு - டிசம்பர் 2023

எட்டாம் வகுப்பு - தமிழ்

விடைக் குறிப்பு

1) அ. மரபு

2.) ஆ.தந்தை பெரியார்

3) அ. பயிலுதல்

4) இ. உணவின்

5) இ. பனையோலைகள்

6) ஆ. பண்பு

7) இ. குற்றமற்ற

8) ஈ. வேற்றுமை

9) அ. நலம் + எல்லாம்

10) ஆ.முறையெனப்படுவது

11) கண்ணெழுத்து

12 ) அறிவியல்

13 ) திருப்பூர்

14 ) குடநாடு

15) இளமை

16) பெரியபுராணம்

17) இயல்பு புணர்ச்சி

18) புலவரே வருக

19) தோன்றல் விகாரம்

20). கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லா
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் – முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

அழகுக்கு அழகு செய் வார் - குமரகுருபரர்

20). வாழ்க நிரந்தரம் ! வாழ்க தமிழ்மொழி! வாழிய வாழியவே!

வான மளந்தது அனைத்தும் அளந்திடு வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி இசைக் கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி! என்றென்றும் வாழியவே!

21). சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை

வெல்லும்சொல் இன்மை அறிந்து

22). மரபுகளை மாற்றினால் பொருள் மாறிவிடும்.

23) காவிரி, பவானி, நொய்யல், அமராவதி

24). தமது இறுதிக்காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணி, அலைந்து, குலைந்து நடுங்கினர்

25). கற்களில் உருண்டும், தவழ்ந்தும் நெளிந்தும் செல்கிறது.

26) நடுநிலைமையுடன் சரியாகச் செயல்படுவதே சான்றோருக்கு அழகு.

27) பண்பு – பாடறிந்து ஒழுகுதல். அன்பு – தன்கிளை செறாஅமை

28) மருந்தினால் நீங்கும் நோய் , எதனாலும் தீராத தன்மையுடைய நோய்கள் முற்றிலும் தீராமல் உள்ளுக்குள் இருந்து துன்பம் தரும் நோய்

29) தாய்மொழியைக் கொண்டே பிறக்கிறது

30) க,இய,இயர்,அல்

31) பொருள் முற்றுப் பெற்ற வினைச்சொற்கள் முற்று வினை அல்லது வினைமுற்று என்பர்.

32). ஆறு வகைப்படும். வேற்றுமைத் தொகை , வினைத்தொகை , பண்புத்தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை

33) அ. பருகு ஆ.கொய்

34). அ. ௩ ஆ. க ௬

35) அ. அண்ணாவின் புகழ் உலகெங்கும் கொடிகட்டி பறந்தது.

ஆ. எங்கள் குடும்பம் வாழையடி வழியாக வளர்ந்து வருகிறது.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

36). ஒளிரும் மணிகளால் செய்யப்பட்ட அணிகலனுக்கு மேலும் அழகூட்ட வேறு அணிகலன்கள் தேவையில்லை.. அதுபோல கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும். ஆகையால் அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் அவருக்குத் தேவையில்லை

37) முன்னிலையில் வரும் - இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும்

ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு - ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை

கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும் - வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும்.

விகுதி பெற்றும் பெறாமலும் வரும் - விகுதி பெற்றே வரும்

38) வருமுன் காக்கும் வாழ்க்கையை வாழக் கற்றுக் கொள்ளுங்கள் சரியான உணவு, சரியான உடற்பயிற்சி, சரியான தூக்கம், ஆகிய மூன்றும் உங்களை நலமாக வாழ வைக்கும். காய்கறிகள், கீரைகள், பழங்கள், சிறுதானியங்களை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

39). அடிமையாய்த் தவித்து கொண்டிருந்த இந்தியத்தாய் சினந்து எழுந்து தன் கைவிலங்கை உடைத்துப் பகைவரை அழித்து, அவிழ்ந்த கூந்தலை முடித்து நெற்றியில் திலகமிட்டு, இந்தியருக்கு மகிழ்வான காட்சியை அளித்தாள்.

40). நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்ற மும் இன்றி இணைவது இயல்பு புணர்ச்சி ஆகும். (எ.கா.) தாய் + மொழி = தாய்மொழி (இரு சொற்களிலும் எம்மாற்றமும் நிகழவில்லை. )

41). உழவர்களின் கடன் தள்ளுபடி, ஏழைகளுக்கான வீட்டு வசதித் திட்டம், ஆதரவற்ற மகளிருக்கானத் திருமண உதவித்திட்டம், தாய்சேய் நல இல்லங்கள், பற்பொடி வழங்கும் திட்டம், நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு பாடநூல் வழங்கும் திட்டம், முதியோருக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம், வேலைவாய்ப்பு அற்றவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம்

42). நன்செய்,புன்செய் நிலங்களுக்கு நீர்வளம் தந்து பயிர்களைச் செழிக்கச் செய்கிறது. விளைந்த பயிர்கள் வழியாக நாட்டின் வறுமையைப் போக்குகிறது. புற்களுக்கு இன்பம் சேர்கிறது. இடையறாது ஓடித் தன் உழைப்பைக் கொடையாகத் தருகிறது

42 ஆ )

வெள்ளப் பெருக்குக் காலங்களில் ஆற்றோரமோ, நீர்நிலைகள் அருகிலோ வசிப்போர்கள் மேட்டுப் பகுதிக்குச் சென்று தங்க வேண்டும். காட்டுதீ ஏற்படும் சூழலில் நகர்புறத்தில் வரவேண்டும். நிலநடுக்கம் ஏற்படும் போது கட்டடத்தை விட்டு வெளியேறி வெட்ட வெளியில் தங்குதல் வேண்டும்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com

43 அ

அனுப்புதல்

கவின்

மேலக்காவேரி

கும்பகோணம்

பெறுதல்

வட்டாட்சியர் அவர்கள்

வட்டாட்சியர் அலுவலகம்

கும்பகோணம்

ஐயா

பொருள் : இருப்பிடச் சான்று வேண்டி

வணக்கம். நான் மேற்கண்ட முகவரியில் பல ஆண்டுகளாக வசித்து வருகிறேன். மேலும் பள்ளியில் உதவித்தொகை பெறுவதற்கு இருப்பிடச் சான்று தேவைப்படுகிறது. ஆகவே விரைந்து அச்சான்றினை வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு

இணைப்பு

1. குடும்ப அட்டைநகல் , 2. ஆதார் நகல்

உறைமேல் முகவரி

43 ஆ

ஆருயிர் நண்பா,

நலம் நலமறிய ஆவல். நீ .மாநில அளவில் நடைபெற்ற சதுரங்கப்போட்டியில் முதல் பரிசு பெற்றுள்ள செய்தியைத் தொலைக்காட்சி வாயிலாக அறிந்தேன்.மிக்க மகிழ்ச்சியாக உள்ளது. நீ இதே போன்று பல வெற்றிகளைபெற எனது மனமார்ந்த வாழ்த்துகிறேன்

இப்படிக்கு,

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

உன். ஆருயிர் நண்பன்

உறைமேல் முகவரி:

44)

அ. கல்வி கேள்வி ஆ. மேடு பள்ளம் இ. போற்றிப் புகழப்பட ஈ. ஈடு இணை. உ. ஆடி அசைந்து

45)

1. வளைந்த கோடுகளால் அமைந்த தமிழ் எழுத்து வடடெழுத்து எனப்படும்.

2. உலகம் உள்ளவரையிலும் தமிழ்மொழி வாழட்டும்.

3. பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம் பரணி ஆகும்.

4. உயிரெழுத்து பிறக்கும் இடம் கழுத்து ஆகும்.

5. தமிழ் அம்புவிடும் கலையை ஏகலை என்றது.

46) படத்திற்குப் பொருத்தமான சொற்கள் எழுதி இருப்பின் மதிப்பெண் வழங்குக.

47 ) அ

மனிதன் தனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்பி, அதற்காகப் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை ஆகும்.

ஓவிய எழுத்து :

தொடக்கக் காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ, வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.

ஒலி எழுத்து நிலை :

ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகியசொல்லைக் குறிப்பதாக மாறியது. ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் முதல் ஓசையைக் குறிப்பதாயிற்று. ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை “ஒலி எழுத்து நிலை" என்பர்.

47) ஆ

உழவு, கைத்தொழில், வணிகம் என்னும் மூன்றும் ஒரு நாட்டு மக்களின் நாகரிக நல்வாழ்விற்கு அடிப்படைகளா கும் என்பர். உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்தில் தமிழர்கள் சிறந்து விளங்கியுள்ளனர்.

www.Padasalai.Net

உள்நாட்டு வணிகம்

சேரநாட்டில் உள்நாட்டு வணிகமும் நன்கு வளர்ச்சியுற்றிருந்தது. மக்கள் தத்தம் பொருள்களைத் தந்து தமக்குத் தேவையான பொருளைப் பெற்றனர். நெல்லே விலையைக் கணக்கிட அடிப்படையாக இருந்தது என்பர். உப்பும் நெல்லும் ஒரே மதிப்புடையனவாக இருந்தன.

வெளிநாட்டு வணிகம்

கடல் வணிகத்தில் சேரநாடு சிறப்புற்றிருந்தது. அதற்கு அந்நாட்டின் இயற்கை அமைப்பே காரணமாக அமைந்திருந்தது. முசிறி சேரர்களின் சிறந்த துறைமுகங்களுள் ஒன்றாக விளங்கியது. இங்கிருந்துதான் மற்ற நாடுகளுக்கு மிளகு, முத்து, யானைத் தந்தங்கள், பட்டு, மணி போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. பொன்,மென்மைமிக்க புடவைகள், சித்திர வேலைப்பாடமைந்த ஆடைகள், பவளம், செம்பு, கோதுமை ஆகியன இறக்குமதி செய்யப்பட்டன

48) அ முன்னுரை, பொருள், முடிவுரை. என குறிப்புச்சட்டம் இட்டு எழுதி இருப்பின் மதிப்பெண் வழங்கவும்

48 )ஆ. வெட்டுக்கிளியும் சருகுமானும் :

குறிஞ்சிப் புதரின் தாழப் படர்ந்திருந்த கிளையில் பச்சை வெட்டுக்கிளி ஒன்று வசித்து வந்தது. அது ஒரு வாயாடி. ஒரு மாலை நேரம் கூரன் என்ற பெண் சருகுமானை வெட்டுக்கிளி பார்த்தது. "என்ன கூரன், பார்த்து வெகுநாள் ஆயிற்று! இவ்வளவு நாடகள் எங்கே போயிருந்தாய்? ஏன் இங்கும் அங்குமாய் வேகமாக ஓடுகிறாய்?' அதற்கு சருகுமான், 'காட்டின் அந்தக் கோடியில் இருந்தேன், இப்பொழுது உன்னிடம் பேச எனக்கு நேரமில்லை. பித்தக்கண்ணு என்னைத் துரத்திக்கொண்டு வருகிறது. விழுந்து கிடந்த மரத்தைப் பார்த்ததும் அதன் அடியில் கூரன் ஒளிந்து கொண்டது. தலையை மட்டும் தூக்கி வெட்டுக்கிளியை எச்சரித்தது. பித்தக்கண்ணு உன்னிடம் என்னைப் பற்றிக் கேட்டால் வாயைத் திறந்து எதையும் சொல்லிவிடாதே என்றது.

வெட்டுக்கிளியும் பித்தக்கண்ணும்:

கூரனைத் தேடிக் கொண்டு பித்தக்கனானும் ஓடைப் பக்கம் வந்தது. வெட்டுக்கிளி அதன் கண்ணில் பட்டதும் அதைப் பார்த்து உறுமியது. 'கூரன் இங்கு வந்தாளா?" என்றது. வெட்டுக்கிளிக்கு உற்சாகம் தலைக்கு ஏறியது. பித்தக்கண்ணுவை இவ்வளவு பக்கத்தில் பார்ப்பது இதுதாள் முதல்முறை, பித்தக்கண்ணுவைப் பார்த்ததால் ஏற்பட்ட பரவசத்தை அடக்க இயலாமல் தன்னை அறியாமல் கூரன் ஒளிந்திருந்த இடத்தருகே குதித்துக் குதித்துச் சென்றது. அதைக்கண்ட பித்தக்கண்ணு, கூரன் பதுங்கி இருந்த மரத்தடிப்பக்கம் சென்று மோப்பமிட்டது. அங்கு புனுகுப் பூனையின் துர்நாற்றமே எட்டியது. அதனால் உறுமிக் கொண்டே அந்த இடத்தை விட்டுக் கிளம்பி வேறு பக்கம் சென்றது.

உயிர்பிழைத்த கூரன் :

கூரன் வெளியே வந்தது. தன் மறைவிடத்தை ஏறக்குறையக் காட்டிக் கொடுத்ததற்காக வெட்டுக்கிளி மீது அதற்குக் கோபமான கோபம், அதற்கு ஒரு பாடம் கற்பித்தாக வேண்டும் என்று எண்ணியது. 'இனி இப்படிச் செய்தால், திரும்பி வந்து உன்னை என் கால்களால் மிதித்து நகக்கிவிடுவேன்' என்று கூறிக் காட்டுக்குள் ஓடியது.

வெட்டுக்கிளியின் பயம்

அன்றிலிருந்து கூரனின் கூர்ப்பாதங்கள் எங்கே தன்மீது பட்டுவிடுமோ என்ற அச்சத்திலேயே வெட்டுக்கிளி வாழ்ந்து வருகிறது. இதனால் தாள் இன்றும் கூட வெட்டுக் கிளிகள் ஓர் இடத்தில் நிலைத்து இருக்க முடியாமல் குதித்த வண்ணமுள்ளன.

49 ) அ. நான் விரும்பும் கவிஞர்

முன்னுரை:

இருபதாம் நூற்றாண்டின் விடிவெள்ளி, புதுமைக் கவிஞர், தேசியக் கவி, மகாகவி எனப் பாராட்டப்பட்டவர் நம் பாரதியாரே ஆவார்.

பிறப்பும் இளமையும் .

பாரதியார் எட்டயபுரத்தில் 11.12.1882 ஆம் நாளில் பிறந்தார். இவரின் பெற்றோர் சின்னசாமி, இலக்குமி அம்மையார் ஆவார். சிறிய வயதிலேயே கவிதை புனையும் திறமையைப் பெற்றார். தமது பதினோறாம் வயதில் பாரதி என்னும் பட்டம் சான்றோர்களால் வழங்கப்பட்டது

விடுதலை வேட்கை:

'. பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு' என்றார். இப்படிப்பட்ட நம் உயர்ந்த பாரதம் ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டிருப்பதைஎண்ணி 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என பாடினார். வெள்ளையரின் அடக்கு முறைக்கு அஞ்சாது விடுதலை உணர்வு மிக்க பாடல்களைப் பாடி மக்களைத் தட்டி எழுப்பினார்.

ஒருமைப்பாட்டுணர்வு

எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் இந்திய மக்கள் என்றார். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே எனப் பாடி மக்களிடையே ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தினார்.

மொழிப்பற்று:

பல மொழிகளைக் கற்றிருந்த பாரதி யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்றுதமிழின்சிறப்பைஎடுத்துரைத்தார்.

நாட்டுப்பற்று

. பாரதத் தாயின் அடிமைத்தனத்தை தகர்த்தெறிய இவர் எழுதிய பாடல்கள்

இளைஞர்களைவீறு கொண்டு எழச் செய்தது. சமுதாயத் தொண்டு: சாதிக் கொடுமைகள், பெண்ணடிமை, சமூக ஏற்றத்தாழ்வுகள் போன்றவை இந்நாட்டிலிருந்து விலக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். மதவெறிப் பிடித்து அலைபவர்களின் போக்கினைக் கண்டித்தார்.

படைப்புகள்:

பாரதியார் எண்ணற்ற கவிதை, உரைநடை நூல்களைப் படைத்துள்ளார். குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், ஞானரதம், தராசு போன்ற எண்ணற்ற படைப்புகளைப் படைத்துள்ளார்.

முடிவுரை:

வளமான, வலிமையான பாரதத்திற்குத் தேவையான சிறந்த வழிகள் யாவும் அவருடைய பாடல்களில் உள்ளன. அவற்றை பின்பற்றினால் அவர் கனவு கண்ட பாரதத்தை நம்மால் உருவாக்க முடியும்.

49) ஆ முன்னுரை, நோய்வரக் காரணங்கள், நோய் தீர்க்கும் வழிமுறைகள் , வருமுன் காத்தல் , உணவே மருந்து , உடற்பயிற்சியின் தேவை, முடிவுரை எனும் தலைப்பில் எழுதி இருக்க வேண்டும்

தயாரிப்பு

எஸ் . ஜெயசெல்வன் , பட்டதாரி ஆசிரியர்

பாணாதுறை மேல்நிலைப்பள்ளி

கும்பகோணம்

தொடர்புக்கு : 9443740120

www.Padasalai.Net